# கோடுகளே கோலங்கள்!!

## Lines are the Arts

முனைவர் ஆ.மகாலட்சுமி / Dr. Mahalakshmi[1]

Date of submission: 2022-03-01
Date of acceptance: 2022-06-10
Date of Publication: 2022-07-28
Corresponding author's Name:
Dr. Mahalakshmi
Email: mahalakshmia83@gmail.com

Man has automatically learned much from Nature, and Kolam is one of them. Kolam means beauty makeup. Historians say that lines were symbols before the letters came into being. In Gujarat and Maharashtra in Northern India, it is known as Rangoli. The tradition of painting kolam is believed to have originated about 5,000 years ago, during the pre – Aryan period. Kolam has two functions – religious and ornamental. Its origin belongs to the ancient Tamil Nadu known as Tamilakan and has since spread to the other southern Indian states of Karnataka, Telangana, Andhra Pradesh and Kerala. It can be found in some parts of Goa and Maharashtra as well.

**Key Words:** Tamil Nadu, Aryan period, religious, Karnataka, Telangana, Andhra Pradesh, Kerala, Goa, Maharashtra.

### முன்னுரை

ஆயகலைகள் அறுபத்தி நான்கு. அவற்றில் ஒன்றான ஓவியக் கலையை கலைகளில் ஓவியம் என்பர். ஓவியக்கலை மிகப்பழமையான கலைகளில் ஒன்றாகும். பழங்கால மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்க்கை நடத்திய பொழுது, தாம் கண்ட விலங்குகள், பறவைகள், மரங்கள் ஏனைய உயிரினங்கள் என்பனவற்றின் உருவங்களை வரைந்து மகிழ்ந்தனர். அவற்றைத் தொடக்கத்தில் வெறும் கோடுகளால் வடிவங்களை திட்டினார்கள். பிறகு கோடுகளை இணைத்து ஓவியங்களை உருவாக்கினார்கள.; சினா, ஜப்பான் எழுத்துக்கள் ஓவியம் போலவே இருக்கும். ஓவியம் என்பது கோடுகளின் நடனமாகும். இக்கோடுகளே பிற்காலத்தில் கோலங்களாக பரிணமித்தது. இதுகுறித்தானச் செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டவுள்ளன.

### கோட்டுக் கோலங்கள்

ஆதிகால மனிதர்கள் குகைகளிலும் பாறைகளிலும் வாழ்ந்த பொழுது வரிவடிவங்களை ஓவியங்களாக திட்டினார்கள். பல ஆயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட ஆஸ்திரேலிய ஆதிவாசிகளுக்கு இன்றும் கற்பாறை மலை குகை ஓவியங்கள் மற்றும் வரிவடிவங்களை வரலாற்று சின்னங்களாக இருக்கின்றன. அவர்கள் கற்பாறைகளில் மிருகங்களை கோடுகளால் ஆன ஓவியங்களாக திட்டி இருக்கிறார்கள். தமிழகத்தில் கற்கால குகைகளில் மிருகங்களை வேட்டையாடுவதையும் வேறு சில குறியீடுகளையும் காணக் கிடைக்கின்றன.

குகைகளில் வாழ்ந்த ஆதிகால மனிதன் பச்சிலை சாற்றால் கற்பாறைகளில் முதலில் வாழ்ந்த இடங்களை சித்திரமாக திட்டினான். பிறகு படிப்படியாக கோடுகளைக் கொண்டு கோலங்களை வரைந்தவர் புள்ளி வைத்து இணைக்கும் கோலங்களையும் கண்டுபிடித்தான். இன்றும் அதனை செய்கின்றனர். அவர்களின் ஓவியங்கள்

[1] The author is an Assistant Professr, in the Nallamuthu Kaunder Mahalingam College, Tamil Nadu, India. mahalakshmia83@gmail.com

பெரும்பாலும் ஓடுகளால் ஆனவையே.

ஆற்றங்கரைகளிலும் கடற்கரையிலும் வாழ்ந்த மனிதன் கரைகளில் நண்டுகள், பூச்சிகள் ஊர்ந்து செல்வதால் உண்டான கோடுகளைக் கண்டு மகிழ்ந்து போய் இருக்கிறான். அதேபோன்று நடந்து போகின்ற ஆடு, மாடுகளின் அடிச்சுவடுகளை கண்டு ரசித்து இருக்கின்றான.; அவனே மண்ணில் மணலில் கோடுகளை போட்டான். பெருங்கதை என்ற பழங்கால இலக்கியத்தில்,

ஊறுகளி யானை ஒருங்குடன் ஏற்றி

*வீறுபடு கோலமொரு வியனகர் விழவணி (பெருங்கதை - 55: 78 - 79)*

என்ற பாடல் வரிகளில் புள்ளினங்கள் அரிச்சுவடிக்கண்டு ரசித்ததாகச் சொல்லப்படுகின்றது.

தொடக்கத்தில் மாட்டுத்தொழுவத்தில் சாணத்தால் மெழுகிய பகுதிகளில் பூச்சிப்பொட்டுகள் வராமலிருப்பதையும் கவனித்தவர்கள். வீட்டினுள்ளே இம்முறையைப் பயன்படுத்தினார். பிறகு அதில் வரிவடிவங்களை வரைந்தனர் அதுவே கோலமாக மாறியிருக்கிறது.

## கோலத்தின் பயன்பாடு

ஓவியக்கலை கிராமங்களில் கைத்தொழிலோடு இரண்டறக் கலந்துவிட்டது. பனை மரத்தின் ஓலைகளில் ஓவியங்களைக் காணலாம். கோலமிடுதல், பச்சை குத்துதல் முதலானவையும் ஓவியக்கலையின் ஒன்றாகும். கோலம் என்றால் அழகு என்று பொருள். இந்தியா முழுவதிலும் உள்ள இவ்வழக்கம் இந்துக்களிடம் சிறப்பாக காணப்படுகிறது. தமிழர்கள் கோலமிடுதல் என்றும் மலையாளிகள் அஸ்தம் என்றும் கன்னடர் ரங்கவல்லி என்றும் அல்லது ரங்கோலி என்றும் அழைப்பர். நாள்தோறும் கரையிலும் மாலையிலும் கோயில் விழாக்களிலும் பொங்கல் நவராத்திரி முதலான விழாக்களிலும் திருமணம் பூப்பு முதலான சடங்குகளிலும் கோலம் போடுவது வழக்கமாகும். வீட்டின் முற்றம் அல்லது முக்கிய உட்பகுதியில் கோலம் இடுவர். அரிசிமா, கல்மாமணை, சுண்ணப்பொடி ஆகியவை பல வண்ணங்களில் பொடியாகப் பயன்படுத்துகின்றன.

திருவிழாக்களில் பல வண்ணங்கள் எடுப்பாக தெரியும். காற்றில் கலைந்து விடாமல் இருக்கவும் உப்பில் பல வண்ணப் பொடிகளை கலந்து கோலமிடுதல் பொதுவாக புள்ளி வைத்து கோலம் இடுவது தான் தமிழர் வழக்கம். புள்ளி வைக்காத கோலம் ரங்கோலி எனப்படும். இம்முறை கன்னட நாட்டில் இருந்து பரவியது.

## பண்டை மக்களின் கோலங்கள்

சங்க காலத்திலே தமிழர்களிடையே ஓவியக்கலை வளர்ச்சி நிலையில் இருந்ததற்கான சான்றுகள் சங்ககால நூல்களில்; இருக்கின்றன. சங்க இலக்கியங்களை பார்க்கின்ற பொழுது பழந்தமிழர் குகை, துணிகளின் வரைவதில் ஒரு நுட்பத்தை கையாண்டுள்ளனர். அதே போன்று மனித உடலில் அதுவும் பெண்களின் உடலில் தோல்களில் ஓவியம் வரைவதில் வியக்கத்தக்க நுட்பத்தை கையாண்டுள்ளனர். இவ்வாறு வரைவதை தொடி என பழந்தமிழர் அழைத்தனர். இதுபற்றி சங்ககால இலக்கியங்களில் குறிப்புகள் இருக்கின்றன. நற்றிணை என்ற நூலில்,

*"பூவொடு துயல்வரும் மால்வரை நாடனை*

*இரந்தோர் உளர்கொல், தோழி? திருந்திழைத்*

*தொய்யில் வனமுலை வரிவனப்பு இழப்ப" (நற்றிணை, 225:57)*

என்ற பாடல் வரிகளில் தொய்யில் குழம்பாலே எழுதப்பெற்ற அழகினைக் கொண்டு வனப்புடைய தோள்களின் அழகெல்லாம் இழந்து போகும்படியாகப் பசலை நோய் பாவுகிறது என்ற அர்த்தம் வருகிறது. தொய்யில் என்பது கொடிபோல் மணச் சாந்தால் வரைவதாகும். அதனை விரித்தல் என்றும் கூறுவது உண்டு.

இதே தொய்யில் செய்தி நாலடியார் நூலிலும் வருகிறது.

*"ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புன்செக்கர்*

*மாலைப்பொழுதின் மணந்தார் பிரிவு உன்னி*

*மாலை பரிந்திட்டு அழுதாள் வனமுலைமேல்*

*கோலம் செய்சாந்தம் திமிர்ந்து"* (நாலடியார் 394)

ஓலையில் எழுதும் கணக்கருடைய ஓசையெங்கும் சிறிய செவ்வானத்தை அடைந்த மாலைக்காலத்தில், தன் கணவன் பிரிவினை எண்ணி, தன் அழகிய தோள்களின் மீது அலங்காரம் செய்திருந்த கலவைச் சந்தனத்தையும் உதிர்த்து, மாலைகளை கழற்றி எறிந்து குழம்பி நின்றாள்.

தமிழ் இலக்கிய நூல்களில் கோலம் பற்றிய பாடல்கள் வருகின்றன. கம்பராமாயணத்தில்,

*"நீர்க்கோல வாழ்வை நச்சி* (கம்ப 6:15, 155)

*நீர்மேலை கோலமெனும் நிலைமைத்தே"* (கம்ப 6:36, 202)

என்று கம்பரும்

*"தரைமொழுகி கோலமிடு"* (மீனா, குறம்,25)

என குமரகுருபரரும்

*"வெள்ளை நுண்மணல் கொண்டு சிற்றில்*

*விசித்திரப்பட வீதிவாய்த்*

*தெளளி நாங்கள் இழைத்த கோலம்*

*அழித்தி யாகிலும் உன்றன் மேல்*

*உள்ள மோடி யுருக லல்லால்*

*உரோட மொன்று மிலோம் கண்டாய்"*

என நாச்சியார்திருமொழியில் பெரியாழ்வாரும் கோலம் பற்றி கூறியிருக்கிறார்கள்.

சீவகசிந்தாமணியில்

*"கொடியனார் செய் கோலமும் வைகல்*

*தோறும் ஆயிரம்"*

என்ற வரிகளும் கோலத்தை விளக்குகின்றன.

எறும்புகள், பறவைகள் போன்றவை வீட்டுக்குள் வந்து பொருளை உண்டு சேதப்படுத்தும் வழக்கம் ஏற்படாமல் இருக்கவே அரிசி மாவினால் கோலமிட்டிருக்கலாம். கோலம் என்ற சொல்லுக்கு சங்க இலக்கியங்களில் வேறு அர்த்தம் வழங்கப்படுகிறது.

தமிழ் இலக்கியநூல்களில் பெரியாழ்வார் திருமொழியும் ஆண்டாளின் நாச்சியார் திருமொழியுமே முதன்முதலில் வாசல் கோலம் குறித்துப் பேசுகின்றன. பெரியாழ்வார்,

*"பொங்குவேன் மணல் கொண்டு*

*சிற்றிலும் முற்றத் திழைக் கலூறில்*

*சங்கு சக்கரம் தண்டு வாள் வில்லும்*

*அல்ல திழைக் கலுறாள்"* (பெரியாழ்வர் திருமொழி 31,3)

என ஆண்டாள் திருமாலின் பஞ்சபூதங்களை வாசலில் உருவக்கோலங்களாக இட்டதை உரைக்கின்றார்.

கோலம் புள்ளியாய் இருந்து கோடாய் வளர்ந்து சிறப்பாய் வளர்ந்த கலை. அவை அரங்க கோலம், மணல் கோலம், புனல் கோலம், அனல் கோலம் எனப்படும். அக்காலங்களில் நடன அரங்கில் அரங்கக்கோலம் போடப்பட்டது. அது ரங்கக்கோலம் என மருவி ரங்கோலி எனபெயர் மாறி வடநாடுகளில் பரவின. இதனை மைசூர் தலைமைக்கல்வெட்டு ஆராய்ச்சி மைய இயக்குனர் ஆர்.வி. ரமே~; தெரிவித்துள்ளார். மணல் கொண்டு போடுவது மணற்கோலமாகும். நீரின் மேல் மலர்களாலால் போடுவது மலர்க் கோலமாகும். அனல் கொண்டு போடுவது அனல் கோலமாகும்.

புள்ளிகளையும் கோடுகளையும் கொண்டு உருவாக்கப்படும் கோலங்கள் நம்பிக்கையின் வெளிப்பாடாக பண்பாட்டின் அடையாளமாக தமிழர் வாழ்க்கையில் திகழ்ந்தன. ஆண்டுதோறும் அமங்கலநாட்கள் தவிர ஏனைய நாட்களில் வாசலில் கோலம் போட்டாலும் மார்கழி மாதத்தில் போடுகிற கோலம் சிறப்பானவை. மாதங்களில் மார்கழி என ஆன்மீக ரீதியில் சொன்னாலும் அறிவியல் ரீதியாகவும்

தை மாதத்தை எதிர்நோக்குகின்ற மிகச்சிறந்த மாதமாகும்.; மார்கழி மாதம் என்பதனால் விவசாய பொருட்களை சேகரிக்கும் பழக்கம் தமிழர்களிடையே இருந்தது. எனவே அம்மாதத்தில் திருமணம் செய்யாமல் தை மாதத்தை எதிர்நோக்கிய சிந்தனையோடு அவர்கள் இருந்தார்கள்.; நிலத்தை உழுதுண்டு வாழ்ந்தவர்கள். எனவே நிலம் சார்ந்த மரபுவழிச் சிந்தனை அவர்களுக்கு இருந்தது. மார்கழி மாதம் பனிமழை பெய்யும். ஆனால் அக்காலத்தில் பசியில் தவிக்க கூடாது என்று சிற்றுயிர்கள் குறிப்பாக எறும்புகளுக்கு உணவிடுவது போல் அரிசிப் பொடியில் கோலம் இட்டனர். அவ்வாறு இடுகின்ற அரிசியை எறும்புகள் உண்ணுவது உண்மையாகும். கோலம் வரைகிற பண்பாட்டு நடைமுறையில் கூட நுண்ணுயிர்களின் வசிக்கின்ற பசி போக்குகின்ற உயர்ந்த பண்பாட்டை அக்காலத் தமிழர் கொண்டிருந்தனர் என்பது அறியலாம்.

## இன்றைய நிலை

இன்று நாகரீகம் என்ற உணர்வில் உண்பதற்கு உதவாத வேறுவகை பொடிகளில் கோலமிடும் பழந்தமிழர் கோலப்பண்பாட்டை உள்வாங்கவில்லை என அர்த்தமாகிறது. கோலம் என்றால் அழகு என அர்த்தம் ஆகின்றது. அதே நேரத்தில் அது பண்பாட்டின் சின்னம் நேர்ப்புள்ளி வரிசையில் *100, 1000* புள்ளிகள் அமைத்து அதனை ஓரிடத்தில் தொடங்கி அந்த நூறாயிரம் புள்ளிகளையும் சுற்றிவளைத்து தொடங்கிய இடத்திலேயே வந்து முடியும். இந்த வகைகள் உலகில் எங்கும் காண முடியாத அரிய கலைச்செல்வம் ஆகும். மேலும் நான்கு பக்கங்களில் இருந்து பார்த்தாலும் அதன் வடிவம் மாறாது. இத்தகைய கலை உணர்வு மிக்க காட்சியினை தமிழரிடையே காணலாம். மதுரையில் அங்கையற்கண்ணி மடத்தில் கோயிலின் நுழைவாயிலில் உள்ள *5625* புள்ளிகள் அடங்கிய பெரிய கோலம் அந்தாதி முறையில் அமைக்கப்பட்டு இருப்பதனை கண்ட கலை நுணுக்கம் அறிந்த அயல் நாட்டு மக்கள் அதனை வியந்து ரசித்து படம் எடுத்துச் செல்கின்றனர். அதேபோன்று பொங்கல் மாதத்தில் தமிழகம் வருகின்ற வெளிநாட்டு பயணிகள் தமிழர் வீடுகளில் போடப்பட்டிருக்கின்றன கோலங்களில் மயங்கி ரசித்து போகின்றனர்.

தமிழரிடையே மரபு வழி உறவுகளில் பண்பாட்டு பதிவுகள் நிறைய இருக்கின்றன. அவற்றில் ஒன்று கோலம். இந்த கோலத்தை தமிழ் உலகிற்கு அப்பால் இன்றைக்கு தமிழர்கள் அறிமுகம் செய்திருக்கிறார்கள். கனடா நாட்டில் ஓராண்டு நகரில் உலகிலேயே மிகப்பெரிய கோலத்தை தமிழர்கள் வரைந்து சாதனை செய்தார்கள். அதனைச் செய்தியாக கனடா நாட்டு ஆங்கில ஏடுகள் வெளியிட்டு சிறப்பித்தன. அதன் பிறகு கோலம் என்ற கலை தமிழர்களை அங்கு புகழ் பெறத் தொடங்கியது.

## பச்சை குத்துதலும் கோலவகையே

பச்சை குத்துதல் பச்சை வண்ணத்தில் மக்கள் தம் உடம்பில் பல படங்களை வரைந்து கொள்வதனை பச்சை குத்துதல் என்பர். அழகுக்காகவும் கலையை பயன்படுத்துவர். மார்பு மேல் கை முன்னங்கால் முதலான உட்பகுதிகளில் பச்சை குத்துதல் வழக்கம்.

மஞ்சள்பொடி அகத்திக் கீரை ஆகியவற்றை அரைத்து துணியில் வைத்து திரியாக்கி எரித்து கரியாக்கி நீர் அல்லது தாய்ப்பாலுடன் கலந்து மையாக ஊசிகளால் விரும்பிய இடத்தில் பச்சை குத்துவார். தமிழ்நாட்டில் குறவன் குறத்தி பச்சை வைத்தலை தொழிலாக கொண்டுள்ளனர். இதற்கு கூலியாக அரிசியை பெறுவர் ஒருமுறை பச்சை குத்திக் கொண்டால் சாகும்வரை அந்த அடையாளம் மறையாது.

சங்கத்தமிழரின் தொய்யில் போல இன்றைக்கு மேலைநாடுகளில் உடலிலே சித்திரம் தீட்டக்கொள்கிற முறை உண்டு. அதனைப் பச்சைக் குத்துவதற்கு ஒப்பாகவும் சொல்ல முடியும். தமிழரிடையேயும் பச்சைக்குத்தல் பழக்கம் உண்டு. இதனை மேலைநாடுகளில் டாட்டூ என அழைப்பர். ஆனால் சங்கத்தமிழரின் தொய்யில் எழுதுவதற்கு இணையானது அல்ல. தொய்யில் வரைந்து பிறகு கழுவிப்போக்க முடியும்.; பிறகு புதிய ஓவியத்தை வரைய

முடியும். ஆனால் ஒரு முறை டாட்டூவை தோலில் வரைந்துவிட்டால் கழுவினாலும் போகாது. பிறகு தோளில் அறுவைச் சிகிச்சை செய்து தான் அதனை அகற்ற முடியும். பச்சைக்குத்தலும் அம்முறையைச் சார்ந்தது.

சென்ற தலைமுறை வரை நெற்றியில் பச்சைப்பொட்டு வைத்தவர்கள் இருந்தார்கள். அவ்வாறு பச்சைப்பொட்டுக் குத்திக்கொண்ட தமிழர்களை இனக்கலவரத்தில் இலங்கையில் அடையாளம் கண்டு அடித்துக்கொன்ற வரலாறு உண்டு. பழங்காலத்தில் அடிமைகளை அடையாளம் காண ஓவியம் குத்திய வரலாறு இருக்கிறது.

### முடிவுரை

இயற்கையிடம் மனிதன் தானாகக் கற்றது அல்லது தெரிந்து கொண்டது ஏராளம். அவ்வகையில் வந்ததுதான் கோலம் இடுதல். கோலம் என்பது அழகு ஒப்பனை என அர்த்தம் ஆகின்றது. எழுத்துகள் வருவதற்கு முன்னரே கோடுகள் குறியீடுகள் இருந்தன என வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். தொடக்கத்தில் மனிதன் வெறும் கோடுகளை போட்டிருக்கிறான் பிறகுதான் அவற்றை வைத்து கோலமாக இருக்கின்றான்.

இயற்கையிடமிருந்து பலவற்றை அறியும் அறிவைக் கொண்ட மனிதனின் கலை உணர்வின் வெளிப்பாடுதான் கோலம.; அது தொடக்கத்தில் வாசல் கோலமாகப் பரிணமித்தது. இவ்வாசல் கோலம் இல்லங்களில் வாழ்பவர்களின் மகிழ்ச்சியைக் குறியீடாகக் காட்டும் விதமாகவும் இருந்திருந்தது. மன்னர் காலங்களில் ஆட்சியின் மேல் வைத்திருந்த எண்ணங்களோடு தொடர்புடையதாக கோலம் போட்டிருக்கலாம். அக்கோலங்களில் மக்கள் தங்கள் மகிழ்வையும் எதிர்ப்பையும் காட்டலாம். ஆகவேதான் தமிழர் இல்லங்களில் அக்காலத்தில் இந்த வாசல் கோலம் முக்கியமானதாக இருந்திருக்கிறது. மேலும் மண்ணில் ஊறும் உயிரினங்களுக்கு உணவாக ஆகும் என்பதால் அரிசிப் பொடியில் கோலம் போடப்பட்டிருக்கிறது.

## References


*Parungathai*. (2000). Chennai: U.Va.S. Pathipagam.

*Natrinai*. (2004). Chennai: New Century Book House Private Limited.

*Naladiyar*. (2004). Chennai: New Century Book House Private Limited.

*Kambaramayam*. (2005). Kampar Kapan Kalagam.

Kumaraa kuruparar. (2003). *Meenachiyamam Kuram*. Chennai: New Century Book House Private Limited.

*Pariyalvar Thirumzoli*. (1995), Chennai: Sri Vaishinavai Pathipagam.

Maththalai Somu. (2005). *Viyakka Vaikkum Tamilar Ariviyal*. Trichy: Uthagam.